**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 69/2023**

நாள் 01.07.2025

PW1 – C.R.மணி

த/பெ – ராமசாமி கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of July 2025.)**

**குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்து ஆதியில் எனது தாய்வழி தாத்தாவான சிலம்பர கவுண்டருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த சிலம்பர கவுண்டருக்கு மாராத்தாள் முதல் மனைவி, சுப்பாத்தாள் இரண்டாவது மனைவி ஆவார்கள். முதல் மனைவி மாராத்தாளுக்கு சுப்பண்ண கவுண்டர் என்ற மகனும், மாராத்தாள் என்ற மகளும் பிறந்தார்கள். இரண்டாவது மனைவி சுப்பாத்தாளுக்கு பூவாத்தாள், கமலாத்தாள் மற்றும் சின்ன தங்கம் ஆகிய மூன்று பெண் பிள்ளைகள் பிறந்தார்கள். எனது பாட்டியான மாராத்தாளின் மகளான மாராத்தாள் என்பவர் எனது தாயார் ஆவார். எனது அம்மா மாராத்தாள் 2000–ம் ஆண்டில் இறந்து போய்விட்டார். எனது அம்மா மாராத்தாளின் இறப்பு சான்றிதழ் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், இறப்பு சான்று நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் சொல்வது பொய் என்றும், எனது அம்மா மாராத்தாள் என்பவர் இறக்கவே இல்லை என்றும், அந்த மாராத்தாள் அவருடைய மருமகளுடன் ஏற்பட்ட பிரச்சனையில் வீட்டை விட்டு சென்று விட்டார் என்று சொன்னால் சரியல்ல.

2. எனது அம்மா மாராத்தாளுக்கு சுமார் 62 வருடத்திற்கு முன்பு திருமணம் நடந்திருக்கும் என்றால் சரிதான். சிலம்பரகவுண்டரின் இரண்டாவது மனைவி சுப்பாத்தாள் மூலம் பிறந்த பூவாத்தாள், கமலாத்தாள் மற்றும் சின்ன தங்கம் ஆகிய மூன்று பேருக்கும் சுமார் 40 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்து விட்டது. அந்த சிலம்பர கவுண்டரின் மகள்களான எனது தாயார் மாராத்தாள், கமலாத்தாள், பூவாத்தாள் மற்றும் சின்ன தங்கம் ஆகிய 4 பேருக்கும் சீரும் சிறப்புகள் செய்து திருமணம் செய்து கொடுத்து விட்டார் என்றும், அதனால் அவர்கள் 4 பேரும் தாவா சொத்தில் அவர்களுக்கிருந்த உரிமையை பாராட்டாமல் அவர்களுடைய சகோதரர் சுப்பண்ண கவுண்டரின் உரிமையை ஏற்றுக்கொண்டு Ouster ஆகிவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த சுப்பண்ண கவுண்டரின் மகன் தான் 1–ம் பிரதிவாதி வேலுச்சாமி என்றால் சரிதான். அந்த சுப்பண்ண கவுண்டர் சுமார் 22 வருடங்களுக்கு முன்பு இறந்து போய்விட்டார் என்றால் இறந்து போன விபரம் மட்டும் எனக்குத் தெரியும். அந்த சுப்பண்ண கவுண்டரின் திருமணத்திற்கு முன்பாகவே எனது தாயார் மாராத்தாள், கமலாத்தாள், பூவாத்தாள் மற்றும் சின்ன தங்கம் ஆகியோர்களுக்கு திருமணம் நடந்து விட்டது என்றால் சரிதான். சுப்பண்ண கவுண்டர் தாவா சொத்தை தனித்த உரிமையுடன் அனுபவித்து வந்த நிலையில் அவர் இறந்து போன பிறகு அவரைத் தொடர்ந்து அவரது மகனான 1–ம் பிரதிவாதி தாவா சொத்தை தனித்த பாத்தியத்துடன் அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

3. தாவா சொத்தில் சிலம்பர கவுண்டரின் இரண்டாவது மனைவி சுப்பாத்தாளின் பெண் மக்கள் மூவரும் தாவா சொத்தில் இருந்து வந்த அவர்களுடைய உரிமையானது அற்றுபோய்விட்டது (Ouster) என்று

தெரிவித்து ஒரு உறுதிமொழி ஆவணத்தை 1–ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது. மேற்படி உறுதிமொழி ஆவணத்தைப் பற்றி 1–ம் பிரதிவாதி அவருடைய எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள விபரத்தை நான் தெரிந்துகொள்ளவில்லை. அந்த உறுதிமொழி ஆவணத்தை ஆட்சேபித்து பதிலுரை எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால், சிலம்பர கவுண்டரின் பெண் மக்களுக்கு சொத்தில் உரிமை இல்லாத நிலையில் தாவா சொத்தில் எனக்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

4. தாவா சொத்தை 1–ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். நானும் சென்று வருகிறேன். தாவா சொத்தில் நான் விவசாயம் செய்வதில்லை என்றால் சரிதான். அதனால் நான் இந்த வழக்கிற்கு செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. எனவே, நான் தாக்கல் செய்துள்ள இந்த பாக தாவாவானது தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.07.01 16:02:12 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**